


அமரர்

# கந்தையா உமாபதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

20.12.2015

உ

சிவமயம்



பன்னாலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தையும் கொழும்பையும்
வசிப்பிடமாகவும் கொண்டவரான

# அமரர்

# கந்தையா உமாபதி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

**20.12.2015**

# சமர்ப்பணம்



குணமெனும் குன்றேறி நின்று,

ஒப்புரவு பேணி, வாழ்வாங்கு வாழ்ந்து,

கடமைகளைச் சீரும் சிறப்புடன் நிறைவேற்றி,

எம்மையெல்லாம் வகுத்தான் வழிமுறையில் வாழ வைத்த

எம் இனிய குடும்பத் தலைவனுக்கு, பாசமுள்ள பிதாவுக்கு,

உயிர் தந்த அப்பாவுக்கு, அன்பு மாமாவுக்கு,

அன்பு மழை பொழிந்த அப்பப்பாவுக்கு

இம்மலர் சமர்ப்பணம்.

இங்ஙனம்

**மகன், மருமகள்,**

**பேரப்பிள்ளைகள்.**

சிவமயம்



தாய் மடியில்
1934-08-17

சிவனடியில்
2015.11.18

# அமரர்
# கந்தையா உமாபதி அவர்கள்

## திதி வெண்பா

மன்மத நல் ஆண்டினிலே மாதமுயர் கார்த்திகையில்
மன்னு திதி பூர்வபக்கச் சப்தமியில் – தன்னேரில்
பன்னாலை வாசர் உமாபதி நம்சிவனார்
பொன்னடியில் சேர்ந்தார் புகல்.

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் வணக்கம்

*பிடியதன் உரு உமை கொளமிகு கரியது*
*வடிகொடுதனதடி வழிபடுமவரிடர்*
*கடிகணபதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே*

## பஞ்சபுராணம்

### தேவாரம்

*தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்*
*காடுடைய சுடலைப்பொடி பூசியென்னுள்ளங்கவர் கள்வன்*
*ஏடுடைய மலரான் முனைநாட் பணித்தேத்தவருள் செய்த*
*பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே.*

### திருவாசகம்

*ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை என்புருகி*
*பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாத மலர்*
*சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிண நெஞ்சே*
*தேடுகின்றிலை தெருவு தோறலறிவை செய்வதொன்றறியேனே.*

### திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தருவே
ஐயா நீர் உலாப் போந்த அன்று முதல் இன்றுவரை
கையாரத்தொழுது அருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைதிரிலோக்கிய சுந்தரனே.

### திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன் மன்னிய தில்லைதனுள்
ஆலிக்குமந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புராணம்

மண்ணுலகத்து நிற்பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின்முற்றுற
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுக
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

### திருப்புகழ்

காசினியிற் பிறவாதே காலனிடத்தணுகாதே
சீல அகத்திய ஞான தேன் அமுதைத் தருவாயே
மாலயனுக்கரியோனே மாதவரைப் பிரியானே
சோலை மலைக்குரியோனே சுவாமி மலைப் பெருமானே.

### வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெலாம்.

திருச்சிற்றம்பலம்

## சிவபுராணம்

### மாணிக்கவாசகர்

திருச்சிற்றம்பலம்

காப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்ற அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வாழ்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையென் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப்புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி

மலஞ்சோறும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள்கரஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராரே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரியநுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப

ஆற்றேஎம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித்திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**



# கந்தர் சஷ்டிக் கவசம்

*காப்பு*

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பழித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மையல் நடனஞ் செய்யும் மயில் வாகனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று (உ)வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர கணப வருக வருக
அசுரர் குடி கெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும் தனியொளி ஒவ்வும்
குண்டலியாஞ்சிவ குகன் தினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகிடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து

எந்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து (உ)தவும்
லாலா லாலா லாலா வேஷமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்

என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க

செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்

கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் ன்னில் வஜ்ஜிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம்மராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட

ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்

கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கள்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகலொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா

தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வராயா
சமரா புரிவாழ் சண்முகத்தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனை
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் ரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைகுற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரியம் அளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்

கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு

ஓதியே செபித்து உவந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எணமர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றலரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
ஊருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

முற்றும்

## தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் உள்ளத்திலிருந்து ....

குடும்ப வாழ்க்கையின் கூறுகளே தெய்வ அம்சங்களாகக் கூறப்படுகின்றன.

வாழ்க்கைப் பாதையில் நீண்ட பயணம் செய்யவிருக்கும் நாம் ஆரம்பப் படிக்கட்டுக்களை அழகாக, ஆழமாக, திடமாக, சலனமில்லாது போட்டுக் கொண்டு விட்டால், எதிர்காலத்தில் துன்பமிருக்காது; கலக்கம் இருக்காது; அவமானமிருக்காது; சென்ற இடமெல்லாம் சிறப்புகள் கிட்டும். அதற்கு இறைவனின் ஆசியும், அருளும் முற்றுமுழுதாக வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் விளைவுகளை நாம் அனுபவித்தே தீரவேண்டும். விஞ்ஞானத்தின் மூலமும், மெஞ்ஞானத்தின் மூலமும் இறைவனைத் தேடுகின்றார்கள். இறையாற்றலையும் அதன் பரிணாம முறைகளையும் உணர்ந்து அனுபவித்துக் கொண்டே வாழ்வில் உயர்ந்து வரும் மனித இனம், செயல் விளைவு நீதியை அறிவு பூர்வமாக இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை. இந்தக் குறைபாடுகள்தான் இன்று மனித சமுதாயத்தில் நாம் அனுபவமாகக் காணும் வாழ்க்கைச் சிக்கல்களும், துன்பங்களுமாகும். செயல் விளைவுத் தத்துவ அறிவு மனித சமுதாயத்திற்கு இன்றியமையாத வாழ்க்கை ஒளியாகும். எல்லை கட்ட முடியாத, வரையறை இல்லாத, பிரமாண்டமான அருட் பேராற்றலான இறையாற்றலேதான் நமது பரிணாமச் சிறப்பில், மன ஆற்றலாகவும் செயல் புரிகின்றது என்பது திடமான மாற்றுக் கருத்தில்லாத உண்மை. பருமன், விரைவு, காலம், தொலைவு என்பவற்றிற்கு இறையாற்றல் அப்பாற்பட்டது. எல்லையற்றது. மனித மனத்திற்கு வியத்தகு ஆச்சரியமான ஓர்

இயல்பு உண்டு. எப்பொருளை நினைத்தாலும் அதைப் போலவே வடிவத் தாலும், குணத்தாலும், இயல்பாலும் தன் மாற்றம் பெறவல்லது மனித மனம்.

*எப்பொருளை எச்செயலை எக்குணத்தை*
*எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைந்தால்*
*அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்*
*அறிவினிலும் உடலினிலும் மாற்றங் காணும்*
*இப்பெருமை இயல்பூக்க நியதியாகும்.*
*எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்*
*தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்*
*தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்.*

இறையாற்றலின் தன்மைகளையும், சிறப்புக்களையும் அறியாமலோ, அலட்சியம் செய்தோ, உணர்ச்சி வயத்தால் தன் முனைப்புக் கொண்டோ அளவு மீறியும், முறை மாறியும் மன ஆற்றல் செயல்புரியும்போது, அச்செய லுக்கு ஏற்ப ஏற்படும் விளைவுகள்தாம் 'செயல் விளைவு' என்றழைக்கப்படும். சிறிதளவும் தவறாமலும், பிழையில்லாமலும், அன்பும், கருணையுமே இயல் பாக அமைந்துள்ளதுதான் இறை நிலை.

*"தப்புக் கணக்கிட்டு தான் ஒன்றை எதிர்பார்த்தால்*
*ஒப்புமோ இயற்கை விதி ஒழுங்கமைப்புக்கு ஒத்தபடி*
*அப்போதைக்கப் போதே அளிக்கும் சரிவிளைவு*
*எப்போதும் கவலையுற்று இடர்படுவார் இதையுணரார்."*

அந்தப் போராற்றல்மிக்க இறைநிலையை உணர்ந்து, அன்பும் கருணையும் கொண்டு உயிர்களுக்குத் துன்பம் அளிக்காமல் வாழ்வது எமது கடமையாகும்.

வாழ்க வளமுடன்.

**( தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் கருத்துக்கள் உலகமெல்லாம் பரவ வேண்டும். )**

**தொகுப்பு:**

**Dr.திருமதி ஜெயகௌரி ஸ்ரீசங்கர் ( J.P)**

# அமரர் கந்தையா உமாபதி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

இலங்கைத் திருநாட்டின் சிகரமெனப் போற்றப்படும் யாழ். குடாநாட்டின் வடக்கே பன்னாலையம் பதியிலே, காலஞ்சென்றவர்களான மயிலிட்டியைச் சேர்ந்த ஓய்வூதியர் சின்னக்குட்டி கந்தையா, வல்லுவத்தையைச் சேர்ந்த செல் லாச்சிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனாக 1934.08.17 அன்று குருநாதரின் திருவருளால் கந்தையா உமாபதி அவர்கள் பிறந்தார். யோகர் சுவாமிகளின் மேல் பேரன்பும், பெரு மதிப்பும் கொண்டிருந்த இவரது தந்தை யாரால் யோகர் சுவாமிகளின் பணிப்பின்படி இவர் உமாபதிசிவம் எனப் பெயர் சூட்டப்பட்டார். காலப்போக்கில் எல்லோராலும் உமாபதி என்றே அழைக்கப்பட் டார்.

தனது ஆரம்பக் கல்வியை விளிசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலையில் 1938 ஆம் ஆண்டு சேர்ந்து கற்றார். இவரது ஆரம்பக் கல்விக் காலங்களில் பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை தலைமையாசிரியராகக் கடமையாற்றினார். அமரர் திரு.கந்தையா உமாபதி அவர்கள் தனது உயர்கல்வியை தெல்லிப் பளை 'மகாஜனா ஆங்கில உயர்தரப் பாடசாலை'யில் தொடர்ந்தார்.

தனது 21 ஆவது வயதில், 1955 ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் இணைந்தார். அதில் பல பதவிகளை ஏற்றுச் சிறந்த நிர்வாகத் திறனுடனும், பொறுப்பான, கடமையுணர்வுமிக்க, கண்டிப்பான தமது நடவடிக்கைகள் மூலமும் வங்கியின் நன் மதிப்பைப் பெற்ற ஓர் சிறந்த வங்கியாளராக உயர்ந் தார். சிரேஷ்ட முகாமையாளராகப் பலகாலம் பல இடங்களிலும் சேவை யாற்றித் தனது 55 ஆவது வயதில் 1989 ஆம் ஆண்டு ஓய்வுபெற்றார்.

வங்கியில் பணிபுரிந்த காலத்தில் 1962 ஆம் ஆண்டு அமரர் முகாந்திரம் பொன்.நாராயணரின் சகோதரர் மலாயன் பென்சனியர் அமரர் பொன்னம் பலம் சின்னத்துரை - காமாட்சிப்பிள்ளை தம்பதியினரின் கனிஷ்ட மகவான இராஜேஸ்வரி என்பவரை பெரியோரின் ஆசீர்வாதத்துடன் திருமணம் செய்து கருத்தொருமித்த தம்பதியினராக வாழ்ந்தனர். அவர்களின் இல்லறப்பேறின் நற்பலனாக 1963 ஆம் ஆண்டு ஜூலையில் ஒரு சற்புத்திரனைப் பெற்றெடுத் தார்கள். அவருக்கு ஸ்ரீசங்கர் எனப் பெயரிட்டு கண்ணின் மணிபோல வளர்த்து வந்தார்கள். காலப் போக்கில் மல்லாகத்தில் தனக்கென ஒரு சிறந்த வீட்டை அமைத்து சகல வசதிகளுடனும் நிரந்தரமாக வாழ்க்கையை மேற்கொண் டார்.

தனது ஏகமகவைப் படிப்பித்து, பட்டம் பெறவைத்து, அவரின் பெயருக்கு ஏற்ப வைத்தியராகப் பார்த்து மகிழ்ந்த பெருமை அவருக்குண்டு. சங்கரன் என்றால் சுகத்தைச் செய்பவன் என்று பொருள். அயலில் உறவுள்ள அமரர் திரு.வேலாயுதம் இராசரத்தினம், திருமதி உருக்மணி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரி ஜெயகௌரியை தன் மகனுக்கு தனது ஓய்வுக் காலத்தில் வெகு சிறப் பாகவும், ஆடம்பரமாகவும் மணமுடித்து வைத்து மனநிறைவு பெற்றார். 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இறைவன் சித்தப்படி இரட்டையர் முறையே மாதங்கன், வேள்மாறன் என்போரைப் பெயர் சொல்லும் பேரர்களாகப் பெற்று மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

இவர் தமது ஓய்வு நிலைக் காலங்களில் அரிய, பல சேவைகள், பொதுத் தொண்டுகள் ஆற்றி எல்லோர் அடி மனதிலும் ஆழமாக வேரூன்றியவர். வரிசப்புலம் மகாமாரித் தாயாரின் ஆலயத்திலும் நிர்வாக சபைத் தலைவராக இருந்து பல அரும்பணிகள் ஆற்றியவர். கோயில் நிர்வாகத்திற்கு முதன் முத லில் யாப்பு எழுதித் தந்த பெருமை அமரர் கந்தையா உமாபதி அவர்களையே சாரும். 1970 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வங்கியாளர் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராகவும், செயலாளராகவும் இருந்து தீவிரமாக ஊழியர் நலத் திற்காகப் பாடுபட்டவர். மல்லாகம் மத்தி கிராம அபிவிருத்திச் சபைத் தலை வராகவும், வட இலங்கை சுதேச மருத்துவ சபைப் பொருளாளராகவும் தனது ஓய்வு நிலைக் காலங்களில் சேவையாற்றி பல நல்லுள்ளங்களின் பெரும் மதிப்பைப் பெற்றவர்.

தனது மகனின் சொந்த வீட்டில் மனைவி இறந்த பின்பும் 11 வருடங்கள் மகன், மருமகள், அன்புப் பேரப்பிள்ளைகள், சம்பந்தி சகிதம் அமைதியாக வும், மன நிறைவாகவும் வாழ்ந்தவர். நோய் ஒருபுறம் தொல்லை தந்தாலும் வைத்திய வசதிகள் குறைவின்றிக் கிடைத்தன. அன்பும் அரவணைப்பும் போதிய உதவிகளும் கிடைத்த போதும் திடீரென எதிர்பாராத விதமாக இறை வன் அழைத்துவிட்டான்.

*செய்கை யாவும் தெய்வத்தின் செய்கை*
*செய்கை யாவும் தெய்வத்தின் சிந்தை*
*உய்கை கொண்ட தன் நாமத்தைக் கூறின்*
*உணர்வு கொண்டவர் தேவர்களாவர்*
*வையமெல்லாம் தெய்வ வலியின்றி வேறில்லை*
*தெய்வம் நீயென்றுணர்.*

*வலிமையுடையது தெய்வம்*
*நம்மை வாழ்ந்திடச் செய்வது தெய்வம்*
*உயிர்களெல்லாம் தெய்வமன்றிப் பிறவா தொன்றில்லை*
*ஊர்வனவும் பறப்பனவும் நேரே தெய்வம்*
*பயிலுமுயிர் வகை மட்டும் அன்றியிங்கு*
*பார்க்கின்ற பொருள்களெல்லாம் தெய்வம் கண்டீர்*
*தெய்வ வலியுண்டு தீமையைப் போக்கும்.*

– என்னும் வரிகளுக்கு இணங்கவும்,

திருமூலர் திருமந்திரத்தலே–

*தன்னையறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னையறியாமற் தானே கெடுகின்றான்*
*தன்னையே அறியும் அறிவை அறிந்தபின்*
*தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே.*

*தானே தனக்குப் பகைவனும் நண்பனும்*
*தானே தனக்கு மறுமையும் இம்மையும்*

*தானே தான் செய்த வினைப் பயன் துய்ப்பானும்*

*தானே தனக்குத் தலைவனும் ஆமே.*

- என்ற கருத்துகளுக்கு அப்பால்,

எல்லாப் புகழும் இறைவனுக்கே என்று தெய்வ நாமத்தைச் செப்பிய வண்ணம் நாம் எல்லோரும் அழுது புலம்பி நிற்க, இறைவனின் திருவடிகளில் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

## ஆருயிர் மகனின்
## அன்பான உள்ளத்திலிருந்து...

கண்ணை இமை காப்பது போல் காத்து, வளர்த்து, கல்வி புகட்டி, அறிவுரைகள் பல தந்து, என்னை சமூகத்தில் நல்ல படியாக, ஞாலம் போற்றும் நல்லவனாக வாழ வழிகாட்டிய தந்தையே! என்னை என் சொந்தக் காலில் நிற்க வைத்து தன்னம்பிக்கை தந்து, எதையும் முயன்றால் சாதிக்க முடியும் என்ற திடத்தை என்னுள் வளர்த்த ஆசான் நீதான்.

"*எவரையும் நம்பி நடக்காது, பிறர் உன்னை நம்ப நட*" என்ற வாசகத்தை பசுமரத்தாணி போல் என்னுள் விதைத்த ஆருயிர் அப்பா.

என் தேவைகள் அறிந்து வழிகாட்டிய என் பிதாவே.

இன்று எங்கள் இல்லமும் கருவறையில் தெய்வம் இல்லாத ஆலயம் போலாகி விட்டதே அப்பா...

இறுதி மூச்சு வரை என்னுடனேயே வாழ்ந்து, எனது ஒவ்வொரு செயற்பாட்டையும் கண்காணித்து, கவனத்துடன் வழிகாட்டிய நீங்கள் இடை நடுவே திடீரென எம்மை விட்டுச் சென்றமையினால், சொல்ல வார்த்தைகளேயின்றித் தவிக்கின்றேன்.

தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. இனி என் காதுகளில் இம் மந்திரங்கள் கேட்குமா?

குருநாதா! என் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய அருள் புரிய வேண்டுகிறேன்.

**பாசமிகு மகன்**
**உமாபதி ஸ்ரீசங்கர்.**

# எனதன்பு மாமா

எனதன்பு மாமா அவர்கள்.... எந்த விடயங்களிலும் கட்டுப்பாட்டுடனும், கடமையுடனும், அதிகாரத் தோரணையுடனும்தான் அவரது செயற்பாடுகள் அனைத் தும் இருக்கும். நான் அவரை 'மாமா' என்றழைத்த காலங்களையும் விட 'அப்பப்பா' என்றழைத்த காலங்களே மிகுதியானவை. அவர் என்னை 'தம்பிப் பிள்ளை' என்றுதான் அழைப்பார். தன்னால் முடியுமானவரை எல்லா வேலைகளையும் தானே செய்வார். எந்த விதத்திலும் மற்றவர்களைக் கஷ்டப் படுத்த விரும்பியவர் அல்லர் அவர். எமது பிள்ளைகளின் முன்னேற்றத்தில் உறுதுணையாக இருந்தவர். தனது நண்பர்களுடன் அளவளாவும் போது எமது பிள்ளைகள் பற்றிப் பேசி இன்புறுவதில் அலாதிப் பிரியம் கொண்டவர். தனது பேரப்பிள்ளைகளிடம் அளவற்ற அன்பு காட்டியவர். அவர் வாசிப்பதில் மிகவும் பிரியமானவர். விமர்ச்சிப்பதிலும் விருப்பமானவர். எனது மாமா வரு வதைக் கண்டு மயங்கியவரும் இல்லை. போவதைக் கண்டு கலங்கியவரும் இல்லை.

அவரின் ஆத்மா சாந்தியடையவும் எம்மை அங்கிருந்து ஆசீர்வதித்து வழி நடத்தவும் எல்லாம் வல்ல இறையருளை நாடிப் பணிகின்றேன்.

ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!

அன்பு மருமகள்

ஸ்ரீசங்கர் ஜெயகௌரி.

# இறந்தும் எமது உள்ளங்களில் வாழும் எமதப்பப்பா

எமது அப்பப்பா எம் மேல் அளவற்ற பாசம் கொண்டவர். எமது அப்பப்பா ஆழ்ந்த அறிவு, ஞானம், தெளிவான வார்த்தைகள், பேசும் திறன் மிக்கவர். அத்துடன் அவரது உச்சரிப்புகள் எம்மை பிரமிக்க வைக்கும். ஆங்கிலத்திலும் சரி, தமிழிலும் சரி எமது வினாக்களுக்கும், அருஞ் சொற்களுக்கும் பொருள் கூறும் தன்மை எல்லாமே எம்மை நம்பிக்கையுடன் நிமிர்ந்து நிற்க வைத்தன. எமது பாடசாலைக் காலங்களில் காலணி துடைப்பதும், காலுறை கழுவுவதும் தமது பணியாக அன்புடன் செய்து வந்தவர். எமது நடை, உடை பாவனையில் கருத்தாக இருந்தவர். உலகில் பிறந்துவிட்ட எந்த ஓர் ஆத்மாவும் ஆரோக்கியமாக, நீண்ட காலம் வாழ்வதற்கே விரும்பும். எமது அப்பப்பாவும் தன்னாலான உடற்பயிற்கள் எல்லாம் செய்து ஆரோக்கியமாகத்தான் இருந்தவர். பிறக்கும் நேரமும், இறக்கும் நேரமும் எம்மைப் படைத்த ஆண்டவன் திருவிளையாடல். எவருமே அதற்குத் தப்ப முடியாது.

“ஆளுக்கொரு தேதி வைத்து ஆண்டவன் அழைப்பான், ஆண்டவன் அழைப்பான், அதில் யாரழுதால் அவனுக்கென்ன காரியம் முடிப்பான்” என்ற பாடல் வரிகளின் யதார்த்தம் உணர்ந்து எம் இனிய அப்பப்பாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல குருநாதரின் பாதார விந்தங்களைப் பணிந்து வணங்கி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**பாசமிக்கப் பேரப்பிள்ளைகள்**

**ஸ்ரீசங்கர் மாதங்கன், ஸ்ரீசங்கர் வேள்மாறன்.**

## எனது சம்பந்தி

எனது மூத்த மகள், திரு. கந்தையா உமாபதி அவர்களின் ஏக புதல்வனை மணந்து 25 ஆண்டுகள் சென்றுவிட்டன. எனது கணவரின் இறப்பின் பின் கொழும்பு வந்து இவர்களுடன்தான் இருக்கின்றேன்.

எனக்கு ஏதாவது திடீர் சுகயீனம் என்றால், தொலைபேசி மூலம் மருமகனுக்கு அல்லது மகளுக்குத் தகவல் சொல்லி (அவர்கள் வெளியில் நின்றால்) வரச் செய்துவிடுவார். நடந்து திரிந்தவர். ஒருவருக்கும் ஒரு கஷ்டமும் கொடுக்காதவர், செவ்வாய்க்கிழமை கூட தனது பாட்டில் சென்று குளித்துவிட்டு வந்தவர். புதன்கிழமை திடீரென இறந்தமை மிகவும் மன வேதனைக்குரியது.

அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருளாசிகள் வழங்குவான்.

அன்புடன் சம்பந்தி

**இராசரத்தினம் ருக்மணி**

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

# ஆன்மாவின் மனத்தூய்மையே சொர்க்கமும், நரகமும்

காலம் சென்ற அமரர் கந்தையா உமாபதி அவர்கள் தனது நிறைவான வாழ்க்கையை 82 ஆண்டுகள் இந்தப் பூவுலகில் வாழ்ந்து மறைந்துள்ளார். அவர்களை எனக்கு நன்கு அறிமுகம் இல்லாவிட்டாலும், அவரது மகன் டாக்டர் திரு. உமாபதி ஸ்ரீசங்கர் அவர்களை கடந்த 6,7 வருடங்களாக நன்கு அறிவேன்.

டாக்டர் அவர்களின் குணாதிசயங்கள், அவரது வாழ்க்கைமுறை, செய்யும் தொழிலில் நேர்மை, மக்களுடன் பழகும் பாங்கு, மக்கள் தொடர்பு, இவற்றை வைத்து இவரது தாய், தந்தையர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது. அவ்வளவு நேர்மையாக வளர்த்தெடுத்து இந்தச் சமுதாய நலனுக்காக சேவை செய்ய அர்ப்பணித்த பெற்றோர்கள் எவ்வளவு பரந்த மனமுடைய கல்விமான்களாக இருப்பார்கள் என்பதை அறிய முடிகிறது.

அந்த வகையில் காலம் சென்ற திரு.கந்தையா உமாபதி எப்படி வாழ்ந்திருப்பார், தமது வங்கித் தொழிலில் எவ்வளது நேர்மை காட்டியிருப்பார், கண்டிப்புடன் செயல்பட்டிருப்பார் என்பதை நன்றாக அவதானிக்க முடிகிறது.

எமது ஆசான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுவார்கள் "ஒரு மரத்தின் வித்து எந்தளவுக்கு ஆரோக்கியமானதாகவும், நன்றாகவும் இருக்கின்றதோ அப்படியேதான் அந்த மரத்தின் கன்றும் இருக்கும்" - என்று. அந்த வித்தில் பழுதுபட்டு குறையேதும் இருந்தால் அந்தக் கன்று முளைக்கும் இலைகளிலும் செடிகளிலும் ஆரோக்கியமற்ற தன்மையையும் வளர்ச்சியின்மையையும் அவதானிக்க முடியும். இது போலவேதான் மனிதனின் வித்துவும் (விந்துநாதம்) தூய்மையுடையதாகவும், மேன்மை உடையதாகவும் இருக்க வேண்டும். அவ்வாறிருந்தால் கண்டிப்பாக வரும் சமுதாயம் உயர்வு பெற இடமுண்டு என்று மகரிஷி அவர்கள் கூறுவார். அதற்குத் தன்னை உணரவேண்டும். தூய நல்லெண்ணங்கள் வேண்டும். விந்துவின் மதிப்பை உணரவேண்டும். இளமை நோன்பு இருக்க வேண்டும். அதற்கான பயிற்சிகளைச் செய்ய

வேண்டும் என்று நமக்குப் பல பயிற்சி முறைகளை ஆசான் அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். இவற்றை இளமையிலே செய்ய வேண்டும். அப்பொழுது நன் மக்களைப் பெற்றெடுக்க முடியும். இன்றைய கம்பியூட்டர் அவரச உலகத்திலே இளைஞர்கள் வழி தவறிச் செல்வதற்கு அநேக வழிகள் உண்டு. அவற்றில் இருந்து அவர்களை மீட்டு நல்வழிப்படுத்தி வேதாத்திரி மகரிஷி அவர்கள், எப்படி நம்மை அறிவது, மனிதனின் சிறப்பு என்ன என்பதை வரும் பாடல் மூலமாக மிகவும் எளிய முறையில் நமக்குத் தந்துள்ளார்கள்.

### மனிதனின் சிறப்பு (1955)

*பூரணைப் பொருளே புதுமையடைந்து*
*ஆரணமான அணுவாய் விரிந்து*
*அணுவின் கூட்டம் இயக்கம் பக்குவம்*
*அசைவாய் இசைவாய் அண்ட கோடிகளாய்*
*ஓரறிவினம் முதல் ஐயறிவினம் வரை*
*ஊனாய், உயிராய் உருவ பேதங்களாய்*
*தானாய் விரிந்த தத்துவமாகிய*
*சுவை முதல் ஐந்தையும் சுகிக்கவும் அறியவும்*
*கர்ம ஞானக் கருவிகள் பெற்று*
*அறிந்தும் வாழ்த்தும் அரூப நிலையாம்.*

*ஆதிநிலையை அறிந்து முடிவுற,*
*எழுந்த வேகத்தால் எடுத்த வடிவம்*
*அறிவின் நிலைகள் ஐந்துக்கும் அப்பால்*
*அறிவின் உயர்வாம் ஆறாம் நிலையில்*
*வந்து பிறந்து வாழ்வதே மனிதன்;*
*சிந்தனை அறிவின் சிறப்பே மனிதன்,*
*யூகம் யுக்தி யோசனையோடு*
*வேகம் நுட்பம் விளைவதற்குரிய*
*அறிவின் நிலையே ஆறாம் நிலையாம்.*
*அவ்வித அறிவின் ஆட்சியே மனிதன்.*

இந்த உலகில் மனிதன் தோன்றிய
அந்த நாள் முதல் இன்று வரைக்கும்
வழி வழியாக வாழ்ந்த மனிதர்கள்
வாழ்க்கை வசதிகள் தேடிய முறையும்
அறிவின் மேன்மை அடைந்த முறையும்
நெறியில் நிலைத்த நினைப்பின் சக்தியால்
ஐம்புலன் அறிவால் ஆராய்ச்சி தன்னால்
நம்பிய வழியில் நாட்டம் செலுத்தி
பார்த்தும் கேட்டும் பழக்கத்தாலும்
தானும் அறிந்து தக்க பலன் பெறும்.

செவ்விய அறிவின் சிறப்பே மனிதன்;
திவ்விய உருவின் திறமே மனிதன்
ஒருவன் அறிவில் உணர்ந்த எதையும்,
உலகோர் அனைவரும் ஒத்தனுபவிக்க
பரவச் செய்து பயன் விளைவிக்கும்
அற்புத அறிவின் சிற்பமே மனிதன்
தனித்த மனிதன் தான் விரும்பிய
அனைத்தையும் முடிக்க அவர் சீர
சகதி மாத்திரம் தாங்கா விட்டால்
யுக்தி யோசனை யூகம் கொண்டு
அப்பொருள் அடைய அச்செயல் முடிக்க
இப்புவியிலுள்ள எத்தனைப் பேரையும்,
ஒன்றாய்த் திரட்டி ஒற்றுமை செய்து
நன்றாய் முடிக்க நல்லறிவாகிய
உயர்ந்த சக்தியாம் ஒளியே மனிதன்
ஊனுடைய சிறந்த உருவே மனிதன்
மனிதன் நினைத்த செயல்கள் தம்மை
அனுபவக் கருவிகள் அறிவின் கருவிகள்
இத்தகைப் பத்து இந்திரியங்களால்
சித்தப்படியே செய்து முடிப்பான்.

இந்திரியங்களின் இயக்கச் சக்தி
எல்லைக்குட் பட்டிருப்பதனாலே
அந்தச் சக்தியை அதிகப்படுத்த
அறிவைச் செலுத்தி ஆராய்ச்சி செய்து
உடற்கருவி கட்கு உபகருவிகளை,
இடத்துக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளும்
வல்லமை அறிவின் வடிவமே மனிதன்,
நல்ல அமைப்புகள் உள்ளவன் மனிதன்
ஆராய்ந்துணரும் அறிவின் உயர்வால்
ஊரார் உலகோர் உள்ளம் விரும்பும்.

இச்சையை அறிந்து இரக்கங் கொண்டு
அச்செயல் முடிக்க அன்பில் பரவி
ஆர்வம் கொண்டு அறிவால் வகுத்து
சோர்வில்லாமல் சொல்லால் செயலால்
பலரின் ஏக்கம் முடிக்கத் தக்க
உலகில் உயர்ந்த உருவமே மனிதன்,
ஓரறிவாகிய உருவம் முதலாய்
ஆறறிவாகிய அந்நிலை வரைக்கும்
அனந்தம் கோடி யாகிய உருவில்,
நினைந்த ஒன்றையோ நேரும் பலதையோ
எவ்வுரு இயல்பும் இனிதே உணர்ந்து
அவ்வியல் பொக்க அதை யனுபவிக்கவும்
தன்னிட அறிவைத் தலைமை யாக்கி
நிர்வகித்து நினைந்தவை முடிக்கவும்
அமைந்த அறிவின் ஆட்சியே மனிதன்,
சமைத்த அறிவின் சக்தியே மனிதன்,
ஆன்மா அறிவின் ஆறாம் நிலையில்
தான் புகுந்ததால் தரித்த ரூபம்
மனிதனாகிய மகத்துவ மாச்சு.
இனியவன் கடமையை உணர்வதே சிறப்பு.

*ரத்த சுவாசச் சுழலாய் இயங்கும்*
*அத்தனை கோடி உயிரினம் யாவும்*
*இன்ப துன்பம் இரண்டினுட் பட்டே*
*என்றும் இருப்பது ஏன் இவற்றிற்கு*
*இருப்பிடம் எங்கே என்றாராய்ந்து*
*விருப்பும் வெறுப்பும் எவையெனக் கண்டு.*
*அறிவே இவையாய்த் தோன்றி இயங்கி,*
*அவைதாம் மாறிடும் தன்மையும் கண்டு,*
*அத்தகைய அறிவின் தத்துவமாறிய*
*அறிவை ஒன்றி அறிவில் நிறுத்தி,*

*அறிவையே அறிய ஆழ்ந்து ஆழ்ந்து*
*பொறிபுலன் அடக்கிப் பொறுமை யடைந்து*
*ஒன்றி ஒன்றி ஒருவனாய் நின்று*
*உட்புறம் நோக்கி உணர்ந்து முடிவில்*
*உருவ மனத்திலும் ஊடே நிறைந்த*
*அருவ நிலையும் அவ்வவ் வுருவின்*
*அமைப்புச் சிறப்பும் இயக்க மொப்ப*
*அரூப இயக்கச் சிறப்பு முணரும்*
*பேரறிவாகிய பிம்பமே மனிதன்,*
*அனைத்தும் அறிந்துபின் அறிவையு மறிந்ததால்*
*ஆதி நிலையையும் அறிந்தே முடித்தான்.*

இதைக் கற்று உணர்ந்து வாழ்க்கையில் நாம் கடைப்பிடித்தால் வரும் எதிர் கால சமுதாயம் நிறைவான ஆரோக்கியமான வாழ்க்கையை வாழமுடியும்.

82 வருடங்கள் நல்ல பூரணமான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து நிறைவு செய்துள்ள அமரர் கந்தையா உமாபதி அவர்களின் ஆன்மா சாந்தியடைய வாழ்த்துகின்றோம்; பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க வளமுடன்.


***வேதாத்திரி மகரிஷியின் சேவையில்***
***இலங்கை மனவளக் கலைமன்றத் தலைவர்***
**பேராசிரியர் திரு.ஏ.மதுரைவீரன்.**
**0714042300**

# வாழ்வாங்கு வாழ்ந்தவர்

எப்பொழுதும் இனியவராக எல்லோருடனும் கலந்து உறவாடி மகிழ்ந்தவர். இலங்கை வங்கியில் முகாமையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பின்னர் ஆன்மீக உணர்வுடனும், சமூகப் பற்றுடனும் அமைதியாக வாழ்ந்து வந்தார்.

குடும்ப உறவுகள் பற்றி நிறைந்த ஈடுபாடும், ஆர்வமும், அனுசரணையும், அக்கறையும் கொண்ட உமாபதி மாமாவின் மறைவு ஒரு நீண்ட பாரம்பரியத்தின் உதிர்வு என்றே கருதுகின்றேன்,

நான் பிறந்து, மொழி பயின்ற காலம் முதலாக எங்களுடைய குடும்ப உறவுகளுடனும், என்னுடனும் ஒட்டி உறவாடி மகிழ்ந்தவர் உமாபதி மாமா. இவர் எங்கள் வீட்டுப் பிளையாகவே நீண்ட காலம் பழகி வந்தார்.

உறவுகளுக்கு அப்பால் எனது அப்பா பண்டிதர் நா.ஆறுமுகம் அவர்களின் அன்பு மாணவனாகக் கல்வி பயின்ற காலங்கள் என்றுமே மறக்க முடியாதவை.

எனது அம்மாவின் அன்புத் தம்பியாக, நான் தடுக்குப் பிள்ளையாக இருந்த காலம் முதல் நடத்தவைகளை எல்லாமம் காணும் தோறும், பேசும் தோறும் கதை கதையாக பேசியவை நெஞ்சில் இனிக்கின்றன.

என்ன செய்வது! நாட்டின் சூழலும் வாழ்வின் விசித்திரங்களும் எம்மையெல்லாம் எங்கெங்கோ தள்ளிவிட்டன. குடும்ப உறவுகளும் இளமை நினைவுகளும், கிராமத்துக் கனவுகளும் சிதைந்து போய்விட்டன.

உமாபதி மாமா ஒரு நிறைந்த அமைதியான வாழ்க்கையை வாழ்வின் இறுதி மூச்சு வரையும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாசூரி.ஆ.சிவநேசச்செல்வன்**

***(கனடா).***

# அன்புக்குரிய உமாபதி மாமா

அமரர் உமாபதி சிவம் அவர்கள் எமது நெருங்கிய உறவினர்களில் முக்கியமானவர். அவரை நான் சிறுவயது முதல் 'உமாபதி மாமா' என்றே அழைப்பேன். எங்கள் குடும்பதிற்கு மிக நெருங்கிய உறவினர் மிகச் சிலரே. அவர்களில் எனக்கு மிகவும் பிடித்தவர் உமாபதி மாமா. சிறுவயதினிலே எங்களுடன் அன்பாகப் பழகிய நாட்கள் எனது மனக்கண் முன் இப்பொழுதும் காட்சி தருகிறது.

எனக்கு நினைவு தெரிந்த காலத்தில் நான்கு மாமாக்களுடன் நெருக்கமாகப் பழகி இருக்கிறேன். அண்ணை மாமா ( சபாபதி ), ஆசை மாமா ( நடராசா ), தம்பி மாமா ( வைரவப்பிள்ளை ) என்ற வரிசையில் நான்காவதாக உமாபதி மாமா. அன்பிலும் பாசத்திலும் சிறந்தவர். எனக்கு எப்போதும் பிடித்த மாமாவும் கூட.

படிக்கும் காலங்களில் கல்லூரி மன்றங்களில் அரிய கருத்தாழங் கொண்ட விடயங்களை பேசுபவர். வாதிடும் தன்மையும் வலிமையும் மிகவும் கொண்டவர். இப்படி எங்கள் அப்பா இவர் பற்றிக் கூறக் கேட்டிருக்கிறேன். தனது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்தபின் இலங்கை வங்கியில் தனது பணியை ஆரம்பித்து அதன் கிளை ஒன்றின் முகாமையாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றார்.

அவர் தனது ஓய்வு காலத்திலும் தொடர்ந்து பொதுப் பணிகளில் ஈடுபட்டு மக்கள் நலனுக்காகப் பணிபுரிந்தார். எமது குடும்பங்களில் இருந்தவர்களுள் கம்பீரமான சிறந்த ஒரு மனிதராவார். அவரது நினைவுகள் மறக்க முடியாதவை. அவர் என்றென்றும் எமது உள்ளத்தில் நிறைந்திருப்பார்.

அவரது ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக.

**செல்வம் தர்மலிங்கம்**

***(கனடா)***

# நீங்கா நினைவலைகள்

உங்கள் மரணச் செய்தி கேட்டதும் எங்கள் இதயத்துடிப்பு ஒரு கணம் துடிப்பதை நிறுத்திவிட்டது. எங்களைக் கண்டதும் அன்போடு வரவேற்று, அருகே இருத்தி, கதைகள் பல பேசி, அறிவுரைகள் பல பரிந்துரைத்து, உறவைப் பேணிக் காக்கும் நீங்கள் இன்று எம்முடன் இல்லை என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை....

ஒவ்வொரு ஞாயிறும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நலம் விசாரிப்பீர்கள்.

உங்களுக்குத் தெரிந்த அனைவரைப் பற்றியும் விசாரிப்பீர்கள்....

எதுவித எதிர்பார்ப்புக்களும் இன்றி யார் என்றும் பாராமல் அனைவருக்கும் உதவிகள் புரிவீர்கள்.

உங்கள் எண்ணம், அறிவுரை, பரிந்துரை, நல்லாசிகள், பதிவுகள் எப்பொழுதும் நீங்கா நினைவலைகளாக இறுதிவரை இருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லாலா - கோசலா (பெறாமகள்)

கௌதமி (பேத்தி).

## அன்புடன் அரவணைக்கும் சித்தப்பா

எமை எப்போதும் அன்புடன் அரவணைக்கும் சித்தப்பா... இப்போது நீங்கள் எங்கே....? உங்கள் பிரிவால் தவிக்கிறோம்.

கஷ்ட நேரங்களில் – நெருக்கடி சமயத்தில் – ஆபத்பாந்தவனாக உதவிக் கரம் நீட்டுவீர்களே. நீங்கள் எங்கே?

எப்போதும் புன்முறுவல் பூத்த முகத்துடன், தட்டித் தந்து, தக்க தருணத்தில் தகுந்த வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் காட்டி நெறிப்படுத்தும் தங்களின் மறைவு எங்களுக்குப் பேரிழப்பு.

என்றும் எங்கள் தந்தையின் அன்புக்கும் பாசத்துக்கும் உரியவராக இருந்து எங்கள் குடும்ப வளர்ச்சியில் அக்கறையுடன் பரிவும் காட்டிய உங்களையும் இழந்து தவிக்கிறோம். உங்கள் திடீர் மறைவு தாங்க முடியாத துயரத்தைத் தருகின்றது.

எனினும் உங்கள் முன்மாதிரியான வாழ்க்கையும், உங்கள் பற்றிய சீரிய நினைவுகளும் எம்மை என்றும் வழிப்படுத்தும் என்று கருதி ஆற்றுப்படுகிறோம்.

**மருமகன் சுப்பிரமணியம் கிரிதரன் குடும்பத்தினர்**
***வரிஷப்புலம், சுன்னாகம்.***

# பண்டிதர் உமா மகேசுவரம்பிள்ளையின் உள்ளத்திலிருந்து .....

தெல்லிப்பளை தென்மேற்கில் உள்ள சிறுகுறிச்சிகளில் ஒன்று பன்னாலை. அந்தக் குறிச்சிக்கு முதன் முதலில் மோட்டார் வண்டியை அறிமுகம் செய்தவர் அமரர் திரு. சி.கந்தையா அவர்கள். இவர் 'யோகர்' சுவமிகளின் அணுக்கத் தொண்டர். யோகர் சுவாமியின் அருளாசியால் கந்தையா, செல்லாச்சிப் பிள்ளை தம்பதிகளுக்குப் பிறந்த இரு புதல்வர்களில் ஒருவர் திரு. உமாபதி அவர்கள். சிறந்த மாணவராக விளங்கிய திரு. உமாபதி அவர்களும் நானும் விளிசிட்டி தமிழ்க் கலவன் பாடசாலையில் 5ஆம் வகுப்புவரை கல்வி பயின் றோம்.

பிற்காலத்தில் இப்பாடசாலையின் பெயர் மாற்றப்பட்டுவிட்டது. Taylor துரையப்பாபிள்ளை ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். மகாஜனா ஆங்கில உயர்நிலைப் பள்ளி என்பது அதன் பெயர். First Year என்ற முதலாம் வகுப் புத் தொடக்கம் SSC என்ற இறுதி வகுப்பு வரை இங்கேதான் ஆங்கில மொழி மூலம் இவர் கல்வி பயின்றார். இவருடன் First Year இல் மட்டும் நான் பயின் றேன். சுந்தரம்பிள்ளை மாஸ்ரர் எங்களுக்கு ஆங்கிலம் கற்பித்தார். தலைமை ஆசிரியராக இருந்தவர் திரு. சின்னப்பா அவர்கள்.

திரு.கந்தையா உமாபதி அவர்கள் SSC சித்தி எய்திய பின்பு வங்கியாளர் பரீட்சைக்குத் தோற்றி வங்கியாளர் ஆனார். படிப்படியாக பதவி உயர்வுகள் பெற்று இறுதியாக இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளராகப் பதவி பெற்று ஓய்வுபெற்றார். இது இவருடைய கல்வி, தொழிற் சிறப்புப் பற்றிய சிறு குறிப்பே.

பொதுத் தொண்டுகள் புரிவதில் மிகுந்த அக்கறை உடையவர். பல்வேறு சங்கங்களில் உறுப்பினராக இருந்து இவர் செய்த தொண்டுகள் அளப்பரியன.

Suntel வழங்கிய தொலைபேசி ஒன்று என்னிடம் இருந்தது. அவருடைய தொலைபேசியும் Suntel. ஞாயிறுதோறும் Suntel to Suntel உரையாடினால் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எனவே ஞாயிற்றுக்கிழமைகளில் இருவரும் தாராளமாக உரையாடி மகிழ்வோம்.

என் மகன் சுமுகன் Mt.Lavinia வில். நான் தெல்லிப்பழையில். அவனுக்குப் பணம் அனுப்பினால் அவன் Minor ஆகையால் அவன் காசாக்குவதில் சிரமம் இருந்தது. திரு. உமாபதி அவர்கள் தன் நண்பரொருவருடன் கதைத்து, தொடர்புகொண்டு, இவன் ஒருவித சிரமும் இன்றிப் பணம் பெற உதவியமையை நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

எல்லோருக்கும் உதவுவது என்ற சிறந்த பண்பாளர். அவருடைய இறுதிக் காலங்களில் தூய சைவராக விளங்கி வாழ்ந்த பெருமையை நினைவு கூர்ந்து மகிழ்கின்றேன். அவரது ஆன்மா கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானின் பாதார விந்தங்களில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

அன்பான, பண்பான நண்பனை இழந்து தவிக்கும்

**பண்டிதர் உமாமகேசுவரம்பிள்ளை**

# மறைந்தும் மறையாதவர்

பொது நிறமென்றாலும் எடுப்பான தோற்றம்; சுரிய மூக்கு; சுடர் விட்டுப் பிரகாசிக்கும் கண்கள்; அவற்றின் மேல் மூக்குக் கண்ணாடி; முறுக்கு மீசை; அகன்ற நெற்றி; மடிப்புக் கலையாத ஆடை; ஆளைப் போலவே குரலிலும் கண்டிப்பு; நேரம் தவறாமை; வேலையில் நேர்மை; கடமையிலே கண்; வந்தோரை வரவேற்பதில் மன்னர்!

இவர்தான் நான் அன்று கண்ட – இன்று அமரராகிவிட்ட – கந்தையா உமா பதி. ஆயிரத்து தொளாயிரத்து எழுபதுகளில் அன்னார் மன்னார் இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளராக இருந்தபோது இலங்கை வங்கி ஊழி யர் தொழிற்சங்க அலுவலாக கொழும்பிலிருந்து மன்னார் சென்றபோது அவரை முதன்முதலில் சந்தித்தேன். "குட்மோர்னிங்" கூறி இறுகக் கட்டிக் கொண்டார். காலை உணவு, தேனீர் தந்து உபசரித்தார். அன்று தொடங்கிய எமது நட்பு அவரது இறுதிக் காலம் வரை தொடர்ந்தது – அவரது ஒரே மகன் வைத்திய கலாநிதி ஸ்ரீசங்கர் உருவில்.

உமாபதியுடன் காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையில் சிறிது காலம் கடமை புரிந்தது எனது சேவையின் பொற்காலம் எனலாம்.

கந்தையா உமாபதி அவர்கள் 17.08.1934 இல் பொன்னாலை, தெல்லிப் பளையில் பிறந்தார். தமது ஆரம்பக் கல்வியை விளிசிட்டி தமிழ்க்கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை தெல்லிப்பழை மகாஜனா ஆங்கில உயர் தரப் பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்தார். கல்லூரிக் காலத்தில் சிறந்த கரப் பந்தாட்ட வீரராகவும், உதைபந்தாட்ட வீரராகவும் திகழ்ந்தார் என்பது கவனிக் கத்தக்கது. மேலும் உதைபந்தாட்டக் குழுவிற்கு தலைமை தாங்கி வெற்றி

வாகை சூடியமை குறிப்பிடத்தக்கது. கலை, இலக்கிய நிகழ்வுகளிலும் ஈடுபாடு காட்டினார்.

1955 ஆம் ஆண்டு - அதாவது தமது இருபத்தோராவது வயதில் - சாதாரண எழுதுவினைஞராக இலங்கை வங்கியில் இணைந்து கொண்ட உமாபதி தமது கடின உழைப்பாலும், நேர்மையான செயற்பாட்டாலும் முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்று மன்னார், யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கடமை யாற்றினார்.

இறுதியாக இலங்கை வங்கி புத்தளம் கிளையின் சிரேஷ்ட முகாமையாளராக வும், புத்தளம் மாவட்ட நிறைவேற்று முகாமையாளராகவும் செவ்வனே கடமையாற்றி 1989 ஆம் ஆண்டு தமது ஐம்பத்தைந்தாவது வயதில் ஓய்வுபெற்றார்.

தமது இறுதிக் காலத்தை தமது ஒரே மகன் வைத்திய கலாநிதி ஸ்ரீசங்கர் தம்பதி களுடனும் (திருமதி ஸ்ரீசங்கரும் ஒரு வைத்திய கலாநிதி) இரண்டு அருமையான பேரப்பிள்ளைகளுடனும் ஸ்ரீசித்தார்த்த வீதி, கிருலப்பனையில் கழித்த அன்னார் 18.11.2015 அன்று அமைதியாக எல்லாம் வல்ல நல்லிறைவனடி சேர்ந்தார்.

பிறப்பவர் அனைவரும் இறக்க வேண்டும் என்பது உலக நியதி. எனினும் அமரர் உமாபதி வாழ்ந்த வாழ்க்கை, கடமையில் பொறுப்பு, குடும்பத்தில் அக்கறை, தாய் மொழி, சமயத்தில் அவருக்கிருந்த பற்று என்பன இன்றைய இளைஞர்களுக்கு வழி காட்டியாக அமைய வேண்டும்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆ.இரகுபதி பாலஸ்ரீதரன்.**

## சித்த வைத்தியத்திலும் சிரத்தை கொண்டவர்

க.உமாபதி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அன்னார் இலங்கை வங்கியில் சிரேஷ்ட முகாமையாளராக பல வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்.

2000ஆம் ஆண்டுக்கு முன்னர் வட இலங்கை சுதேச வைத்திய சபையில் நான் செயலாளராக இருந்தபோது அன்னார் பொருளாளராகக் கடமையாற்றி யுள்ளார். அவர் செய்த அளப்பரிய சேவையை என்றும் மறக்க முடியாது.

அமரர் வைத்திய கலாநிதி உரோ மகேஸ்வரன் அவர்கள் வடக்கு, கிழக்கு மாகாண சபையில் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிக்கு முதன் முதல் அரச மானியம் கிடைக்கப் பெற்றபோது இலங்கை வங்கியில் சபையின் பெயரில் வங்கிக் கணக்கு திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அன்னாரின் முயற்சியால் வங்கிக் கணக்கு திறக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமையை நினைவுகூருகின்றேன்.

இவர் சைவசித்தாந்த கோட்பாட்டில் மிகவும் ஈடுபாடுள்ளவர். அத்தகைய ஒரு நல்ல மனிதருக்கு எமது மனப்பூர்வமான அஞ்சலிகளை செலுத்துகின்றோம். அவரை இழந்து துன்புற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு மனச் சாந்தி கிடைக்கவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிறைவு செய்கின் றேன். அன்னாரின் நினைவாக 'விட முறிவுக்கு நம் நாட்டு மருத்துவம்' என்ற தலைப்பில் ஒரு சிறு மருத்துவக் குறிப்பை இந்நூலில் சமர்ப்பிக்கின்றேன்.

**Dr.பொன்.இராமநாதன்**

*ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

# நண்பன் உமாபதியுடன் பகிர்ந்த நாட்களும் நினைவுகளும்

1975 இல் தீவுப் பகுதிகளுக்கு அரச கால்நடை வைத்தியராகப் பொறுப் பேற்று, அரச கால்நடை வைத்தியசாலையொன்றை ஏற்படுத்துவதற்காக வேலணை கமத்தொழிற்சேவை நிலையத்திற்குச் சென்ற வேளை, இலங்கை வங்கி வேலணைக் கிளையை நிறுவும் நோக்கத்துடன் வருகை தந்த வங்கி முகாமையாளர் திரு. உமாபதியைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். கால் நடை வைத்திய ஊழியர்களின் மாதச் சம்பளங்களையும், அந்த வங்கிக் கிளை யில் வங்கியூடாக திரு.உமாபதியிடம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களும் ஏற்பட்டன. அன்று ஏற்பட்ட எங்கள் உறவு அவர் மறையும் வரை நீடித்தது.

அவரின் பண்பும், புன்சிரிப்பும், சரளமான ஆங்கில உரையாடல்களும், தமாஷான கதைகளும் என்னை மிகவும் கவர்ந்தன. காரியாலய இடை நேரங்களில் நாம் சந்திக்கத் தவறுவதில்லை. இவ்வுறவு நான் பசறைக்கு மாற்றலாக 1977 ஆம் ஆண்டு செல்லும் வரை நீடித்தது. திரும்பவும் திரு. உமாபதி இலங்கை வங்கி, பருத்தித்துறை கிளைக்கு மாற்றலாகி வந்தபின் இடைக்கிடையே அவரைச் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றேன்.

அங்கிருந்து திரு. உமாபதி இலங்கை வங்கி புத்தளம் கிளைக்கு மாற்ற லாகி அங்கு எனது நண்பன் கால்நடை வைத்தியர் திரு.பொ. இராமநாத னுக்கு இலங்கை வங்கி முகாமையாளர் விடுதியில் 1985 இல் தங்குமிட வசதி களைக் கொடுத்துதவினார். அவ்விணைப்பு திரு. உமாபதியின் செய்திகளை வைத்தியர் இராமநாதன் மூலம் அறியக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது.

இப்படியாக காலங்கள் கடந்து செல்கையில் நானும் கொழும்புக்கு மாற்ற லாகி வந்தேன். இங்கு அரிமா சங்கத்தினூடாக திரு.உமாபதியின் ஒரே மகன் வைத்தியர் ஸ்ரீசங்கரின் அறிமுகமும் நட்பும் கிடைத்தன.

இவ்வறிமுகம் திரும்பவும் திரு.உமாபதியைச் சந்திக்கும் வாய்ப்பாக மாறியது. திரு.உமாபதி இலங்கை வங்கியிலிருந்து இளைப்பாறிய பின் தனது மகனின் குடும்பத்துடன் கிருலப்பனையில் வசித்து வந்தார். எனது ஒன்றுவிட்ட சகோதரி திருமதி நவமலர் துரைரட்ணமும் கிருலப்பனையில் வசித்து வருகின்றார். அன்னாரைச் சந்திக்கப் போகும்போதெல்லாம் திரு. உமாபதியையும் தவறாமல் சந்தித்து அளவளாவியே வருவேன். அந்நேரங்களில் பத்தும் பலதும் கதைப்போம். வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவற்றைப் பற்றிய அறிவுரைகளைத் தனது அனுபவ ரீதியாகச் சொல்வதற்குத் தவறமாட்டார். திரு.உமாபதியின் அனுபவங்கள் அன்னாரின் இரட்டைப் பேரமக்களின் உயர்வுக்கு வழிகாட்டியாக அமைந்தன. அப்பேரமக்கள் புலமைப் பரிசில்கள் பெற்று பங்களாதேசத்திற்கு வைத்தியப் படிப்புகளுக்குச் செல்லும்பொழுது மட்டிலா உவகையுற்றார்.

திரு.உமாபதி தமது நண்பர்களான இலங்கை வங்கி ஊழியர்களுக்குத் தேவையான தருணங்களில் அவரின் அனுபவங்களையும் அறிவுரைகளையும் பகிர்ந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சியடைவார். நேரகாலம் பாராது அவர்களுக்கு உதவுவதில் பின்நிற்கமாட்டார்.

சிறுநீரக செயற்பாடுகளின் குறைகளினால் இறுதிக் காலங்களில் திரு. உமாபதி நோய்வாய்ப்பட்டாலும் மிகவும் தைரியமாக வாழ்க்கையை எதிர்நோக்கினார். அத்தைரியம் அவரின் நன்மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

திரு.உமாபதியின் உடல்நலத்தில் அவரின் மகன், மருமகள் இருவரும் மிகவும் கண்ணும் கருத்துமாகவிருந்து அவரைப் பாதுகாத்தனர். அன்னாரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அவர்கள் சிறிதும் பின்நிற்கவில்லை.

பிறப்பவர் இறப்பது திண்ணம் என்பதற்கமைய திரு.உமாபதி எங்களை விட்டுப் பிரிந்து இறைவனடி சென்றுவிட்டார். அவரின் நினைவுகள் அன்னாரின் நண்பர்களின் மனதில் என்றும் நிலைத்திருக்கும். வைத்தியர் ஸ்ரீசங்கரின் குடும்பம் அவர்களின் வழிகாட்டியை இழந்துள்ளது. இறைவன் அக்குடும்பத்தை வழிநடத்துவாராக.

**அன்புள்ள நண்பன்**

**கால்நடை வைத்தியர் த.கதிர்வேற்பிள்ளை.**

***சத்தியா தொடர் மாடிகள்.***

***76 3/1, W.A.சில்வா வீதி, வெள்ளவத்தை,கொழும்பு – 06***

## நினைவில் நீங்கா உமாபதி மாமா

அமரத்துவம் அடைந்த உமாபதி மாமா அவர்கள் பார்புகழும் பன்னாலை என்னும் பதியில் கந்தையா செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு இரண்டாவது புதல்வனாக அவதரித்தார். உறவினர் என்ற ரீதியில் இவரது குடும்பத்துடன் எமக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

அன்பு, அடக்கம், பண்பு, பணிவு, அஞ்சாமை, இறையுணர்வு, நேர்மை இவற்றோடு குடும்ப நலம் பேணும் ஒருவராக விளங்கிய மாமா வங்கித் தொழில் புரிந்து மக்களுக்கு ஆற்றிய சேவையினால் ஊர்போற்றும் உத்தமனாய் வாழ்ந்து வந்தார். இவர் பல வருடங்களாக தனது மகனுடன் கொழும்பில் வசிக்க வேண்டிய் நிலை வந்தாலும் தனது ஊரில் உள்ள உறவுகளுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு சுகம் விசாரிப்பதிலும், உதவிகள் புரிவதிலும், அறிவுரைகள் வழங்குவதிலும் எப்போதும் பின்னிற்பதில்லை. இவர் இறைவனடி சேர்ந்தாலும் நம் மனதில் நீங்கா இடம்பிடித்துள்ளார்.

குருநாதரை குலதெய்வமாகக் கொண்ட இவர் தனது பூர்வீக நிலத்தில் கோவில் அமைத்து பூசித்து வந்தார். எந்நேரமும் நெற்றியிலே வீபூதி அணிந்திருக்கும் இவர் எந்தக் கருமம் ஆற்றும்போதும் குருநாதரை நினைக்கத் தவறுவதில்லை. இவரின் இறுதிக் காலத்தில் கொழும்பில் வசித்து வந்தாலும் எங்களுடன் தொலைபேசியில் உரையாடியபடி குருநாதருக்குரிய கோயிற் திருப்பணிகளை நிறைவே செய்து வாழ்ந்தார்.

இவரின் ஆத்மா சாந்தியடைய நாமும் குருநாதரை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**திரு.திருமதி சிவப்பிரகாசம் தவமலர்**
**குடும்பத்தினர்.**

# கண்டால் விடமாட்டார்

அமரர் கந்தை உமாபதி அவர்கள் திருமணமாகி மல்லாகத்திற்கு வந்த வேளையில் அவருக்கு முதல் நண்பனாக கிடைத்தவர் எனது மாமனார் அமரர் கந்தப்பிள்ளை தியாகராசா அவர்கள். அந்த வேளையில் நானும் பல முறை அவரைச் சந்தித்திருக்கின்றேன். அவரது இதழ்களின் மென்புன்னகை யையும் மனித நேயத்தையும் உதவும் சுபாவத்தையும் சீரிய பழக்க வழக்கங்க ளையும் தெய்வீக வசீகரத்தையும் கண்டு நானும் அவரோடு பழக ஆரம்பித் தேன். அந்த உறவு அன்று முதல் இன்றுவரை மிகவும் நெருக்கமான குடும்ப உறவாக மலர்ந்தது. எமது குடும்ப விடயங்களைக் கூட நாங்கள் கலந்துரை யாடுகின்ற அளவிற்கு எமது நட்பு வளர்ச்சி பெற்றது. இதேவேளையில் அவரது மகன் சங்கர் அவர்களும், மனைவி, பிள்ளைகளும் கூட எங்களோடு பழக ஆரம்பித்தமை மிகவும் மகிழ்ச்சியான விடயம்.

நான் பிரான்ஸ் நாட்டுக்கு எனது பிள்ளைகள், பேரப்பிள்கைளைப் பார்ப் பதற்காக போய் வருவது வழக்கம். அப்போது தொலைபேசி மூலம் அவரோடு தொடர்பு கொள்ளத் தாமதம் ஏற்பட்டுவிட்டால் உடனே அவரே தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வார். நான் நாடு திரும்பியதும் அவரைச் சந்திக்க தவறு வதில்லை. கண்டால் விடமாட்டார். பலமணி நேரம் உரையாடுவோம். பிரியும் போது அவரது இன்முகம் மாறுவது கண்டு நானும் கவலையோடு வீடு திரும்பு வேன். இறப்பதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் கூட அவரோடு உரையாடி விட்டு வந்தேன்.

அவரது திடீர் பிரிவு யாவரையும் துயரத்தில் வீழ்த்திவிட்டது. இப்படியான ஒரு தூய நட்பை இழந்தமை என் மனதை வாட்டுகிறது. என் செய்வோம்? விதியை வெல்ல யாரால் முடியும்? அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறை வனை எல்லோரும் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி!

**திரு.மு.விநாயகமூர்த்தி**

***நீலியம்பனைப் பிள்ளையார் அரிசி ஆலை, மல்லாகம்.***

# ஆழ்ந்த சிந்தனையாளர்

உமாபதி ஸ்ரீசங்கர் என்னுடைய நீண்டநாள் உற்ற நண்பர். எங்கள் உறவு மூன்று தசாப்தங்களாக நீடிப்பது. கடந்த பத்து வருடங்களாக ஸ்ரீசங்கர் நிரந்தரமாகக் கொழும்புக்கு வந்த பின்னர் அவரது தந்தையாரை தொடர்ந்து சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. தந்தையார் உமாபதி அவர்கள் ஒரு சிந்தனை யாளர், சிறந்த எழுத்தாளர், ஆழ்ந்த வாசிப்புப் புலமை உடையவர். செய்தி களைத் தகவல்களை அறிவதில் எப்போதும் ஆர்வமுள்ளவர். அவரது வாழ்க்கை முறை ஒரு திட்டமிடப்பட்ட வரையறைக்கு உட்பட்டது.

தம் வீட்டின் முன் அறையில் இருக்கும்போதே வீட்டுக்குள் நடக்கும் நிகழ்வு களை உன்னிப்பாக அறியும் நுணுக்கமும், நடப்புகளை கிரகிக்கும் திறமை யும் கொண்டவர். தமக்குப் பிடிக்காதவை இடம்பெற்றால் அவற்றைச் சுட்டிக்காட்டி தமது மகனுக்கு அறிவுரை கூறும்படி நாசூக்காக என்னிடம் எடுத்துரைப்பார்.

அவரது கையெழுத்திலான காசோலைகளைக் கண்டு நான் அடிக்கடி வியப்பதுண்டு. அந்தக் கையெழுத்தில் தெரியும் அச்சுப்பாணி, உறுதி, தெளிவு ஆகியன அவரின் திடகாத்திர மனநிலையின் பிரதிபலிப்பே.

மகன் ஸ்ரீசங்கர் மீது வாஞ்சை கொண்டவர். மகனின் நலனில் அக்கறை யும் கவனிப்பும் மிக்கவர். மகனின் மனதை என்றுமே புண்படுத்த விரும்பாத வர். அதனால் சில விடயங்களை என்னிடம் குறிப்பிட்டு காரியமாற்றுவார்.

பிற்காலத்தில் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது தான் மேலும் காலத்தை வீணடிப்பது எல்லோருக்கும் சிரமம், சுமை, தொல்லை என்று கூறுவார். அத னால்தான் என்னவோ நேரத்துடன் சுகமான மரணத்தைத் தனதாக்கி திடீரென விடைபெற்றார்.

என் வாழ்வில் நான் சந்தித்த நல்ல மனிதர் அவர். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**Dr.ச.சிவகுமார்.**

# ஐயா நீங்கள் எங்கே ....???

உடல் நிலை தளர்ந்தும், மனநிலை தளராது, திடமான நம்பிகையுடன் காலடிகளை நகர்த்திக் கொண்டு சென்ற எமது மதிப்பிற்குரிய ஐயா இறுதி மூச்சுவரைத் தன்னால் எதையும் சாதிக்க முடியும் என்ற நிலையை ஏனைய முதியவர்களுக்கும் எடுத்துக்காட்டி வாழ்ந்தவர். அவரது ஆத்ம சாந்திக்காக இக் கட்டுரையை காணிக்கையாக்கி மனம் நிறைவடைகிறோம்.

முதுமை என்பது ஒரு நபரின் பிறப்பில் இருந்தே தொடங்குகின்றது. மனிதன் வளர்ச்சியின் பரிணாமத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் முதிர்ச்சியை, அது தரும் அனுபவத்தை, வாழ்க்கைப் பாடமாகக் கொள்கின்றான். முதுமையும், இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்க முடியாத, மாற்ற முடியாத நிகழ்வுகளாகும். மூத்த பிரஜைகள் என அழைக்கப்படும் முதியோர்கள் தாங்களது முதுமைப் பருவத்தை ஆனந்தமாகக் களிக்க வேண்டும். ஆனால் இந்த 21 ஆம் நூற்றாண்டில் முதியவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாது புறக்கணிக்கப்படும் நிலையிலும், பரிதாபத்திற்குரிய நிலையிலும் காணப்படுவது மிகவும் வேதனைக்குரிய செயலாகும். பொருளாதார நிலை கருதி குடும்பத்தில் தலைவனும், தலைவியும் வேலைக்குச் செல்ல வேண்டியது நிர்ப்பந்தமாகின்றது. சில விதிவிலக்குகளும் இருக்கின்றன என்பது உண்மை. இதனால் வீட்டில் இருக்கும் முதியவர்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் சில, பல சிரமங்களையும் எதிர்கொள்கின்றார்கள். மனநிலையிலும் பாதிக்கப்படுகிறார்கள். நாம் சேவை செய்யும் 'அம்மா இல்லம்' இந்த முதியவர்களை அரவணைத்து, ஆதரவு காட்டி, சொந்த வீட்டில் இருப்பது போன்ற ஒரு சூழலை ஏற்படுத்தி, அவர்களின் முதுமைப் பருவத்தை ஆனந்தமாகவும், பாதுகாப்புடனும் களிக்க உதவுகின்றது. இங்கு முதியவர்கள் மட்டுமன்றி நோயாளர்

களும் பராமரிக்கப்படுகின்றார்கள். முதியவர்கள் தங்கள் குறை நிறைகளை சக தோழர்களுடன் பரிமாறிக் கொள்வதுடன், தாம் கவலைகள் மறைந்து வாழக் கூடிய ஒரு சந்தப்பத்தையும் 'அம்மா இல்லம்' வழங்குகின்றது.

அன்பு பாசத்திற்கு ஏங்கும் முதியவர்களுக்கு அம்மா இல்லம் ஒருவரப்பிர சாதமாகும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!

ஐயாவின் பிரிவால் துயருறும்
**'அம்மா இல்லம்' ஊழியர்கள்,**
**'இராஜேஸ்வரி பாமசி' ஊழியர்கள்,**
**'மெடி கெல்ப்' ஊழியர்கள்.**
**(தொலைபேசி : 0777126859**
**0718234691)**

## மதிப்பிற்குரிய
## எனதருமை ஐயா!

ஆரம்ப காலத்தில் இருந்தே எங்கள் ஐயா உடன் பழகிய காலம், வாழ்ந்த காலம் எல்லாம் இனிமையானவை. அறிவுரைகளுடன் கூடிய கட்டளைகளை வழங்குவார். பல தரப்பட்ட அறிவுரைகளுக்கு முன்னுதாரணங்கள் பழமொழி களாகவே இருக்கும். அத்தோடு இல்லாமல் இப்படி வாழ்ந்தால் என்ன மாதிரி எதிர்காலம் அமையும், இப்படி நடந்தால் என்ன மாதிரியான வாழ்க்கை அமையும் என்று சிறு, சிறு எடுத்துக்காட்டுகளுடன் கதைகள் சொல்லுவார். சிறுநீரக நோயின் நிமித்தம் வாரத்தில் 2 தடவைகள் லங்கா வைத்திய சாலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது. அவரை அழைத்துச் செல் லும் சேவையை சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் செய்வேன். எனது மகன் 'சஸ்மிந்' மீதும் நிறைந்த பாசம் கொண்டவர். ஐயா அவர்கள் எனது மகனுக்கு வீபூதி பூசி ஆசீர்வாதம் வழங்குவார். 18.11.2015 அன்று அவருக்கு 115 ஆவது Dialysis தினமாகும். அன்றும் ஐயாவுடன் செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத் தது. நானும் டாக்டரும்தான் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றோம். என்ன செய்வது? துர்ப்பாக்கியம். யாருமே எதிர்பாராத நிலையில் திடீரென இறைவன் பாதம் ஐயா அவர்கள் சென்றுவிட்டார். அவர்களது ஆத்மா சாந்தி யடைய இறைவன் துணை புரிவாராக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஐயா மேல் அன்பும் மரியதையும் கொண்ட

**ஆறுமுகன் கார்த்திகைநாதன்**

## Tribute To A True Friend

I had the privilege of working with Mr.K.Umapathy at the Bank of Ceylon, Mannar Branch in 1983 for about a year. I consider it a privilege to have worked with him as my Manager. When compared to many other Superiors he was well disciplined, strict and not only concerned with the work, equally concerned about the well being of the staff who worked with him.

He was a Trade Unionist and used to defend and advise genuine grievances of the staff.

I have learnt from him to be a successful Banker. To retire gracefully from the Bank is like walking in a tight rope. You have got to get along and serve the customers to their satisfaction, manage and handle the staff efficiently and carefully at the same time safeguard the interest of the Bank. All these qualities he had because his dealings were strictly transparent and honest without any expectation.

We were staying together at the Bank Quarters. Weekends we used to travel to Jaffna from Mannar through Sangupiddy ferry and back. It took almost a little more than an hour to travel and my memory is still fresh travelling together with other members of the staff. That was the time of civil disturbance and sometimes our travel was not according to schedule due to disturbance. We experienced untold difficulties as a result.

He went on transfer to Bank of Ceylon Puttalam and later he retired in 1989 as Acting District Manager from there.

After his retirement he was living in Jaffna and when he shifted to Colombo from Jaffna in 2000 to his son Dr.Shankar's place we renewed our old friendship.

Thereafter I was in constant touch with him.

I used to visit him at his son's house very often at Kirullapone. He calls me almost on every Sunday night and share matters of interest including

his past experience on various subjects. Even three days before his death when I met him he did not show any sign of illness. We had common interest of discussing issues of disciplinary matters and he used to share valuable points even at his age, I admired his memory power, it was very sharp even at the age of 82.

He was very much concerned and proud about his twin grandsons both are medical students.

Truly I am missing a friend who was very dear to mé.

May his soul rest in peace.

16/3, Terrence Avenue
Mount Lavinia.

**C.J.Ranjith JP**
*Retired* Banker.

## A tribute to an ex-banker, Late Mr.Umapathy

Though I have served the Bank of Ceylon for a brief period from the year 1970 to the year 1977, I did not have the opportunity of working with Late Mr.Umapathy during that time.

It was only when his son, Dr.Srishankar became a member of our **LIONS CLUB OF COLOMBO INNER COLOMBO,** I had the honour of meeting the grand old gentleman and was able to compare notes, and got to know of the great deeds that he did for the needy society.

As it is the tradition of our **LIONS FAMILY** to keep in touch with the club members and the immediate members of the family, my personal contacts with Late Mr.Umapathy increased to that extent that I had developed a kind of respect and esteem for him. The high regards for his fellow banking colleagues and the sincere service mindedness to the poor and the needy have brought him in touch with a number of like minded people in the society and I am proud to be one among them.

The son, **LION Dr.Srishankar**, becoming a president of our club, continues to be the carrier of the great ideals of service that the father ingrained in him and serves the Lions Club as one of our past presidents.

No words of consolation to the bereaving family, which mainly consists of the son, Dr.Shankar, the daughter-in-law and the two grandsons, can mitigate the pain of mind at this great loss and I pay homage to this great soul and **MAY HIS SOUL REST IN PEACE!**

**LION R.SUNTHARALINGAM** MJF

*PAST PRESIDENT AND PRESENT*
*ZONE CHAIRPERSON,*
*LIONS CLUB OF COLOMBO INNER COLOMBO,*
*LIONS DISTRICT 306 B1.*
*SRI LANKA.*

# அதிபர் ஜெயரட்ணத்தின் சான்றுரை

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் ரி.ரி.ஜெயரட்ணம் தமது மாணவனான கந்தையா உமாபதி அவர்கள் தன் 21 ஆவது வயதில் இலங்கை வங்கியில் இணைந்த சமயம் - 1955 ஆம் ஆண்டில் - சரியாக அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் - வழங்கிய நற்சான்றுப் பத்திரத்தின் பிரதி இது :-

**MAHAJANA COLLEGE**

T. T. JAYARATNAM, B. A. (Lond.), M. R. S. T.
PRINCIPAL.

TELLIPPALAI (CEYLON).

10th February 1955.

This is to certify that Kandiah Umapathy was a pupil in this college for nearly nine years. He secured five credit passes in the S.S.C. (English) Examination of December 1953. I understand he has since completed the Examination and is entitled to an S.S.C. Certificate.

During his career here, I have always found him industrious and reliable. As the Secretary of Tamil Literary Society, he displayed a keen sense of responsibility. He played football and other games and was generally interested in all our extra curricular activities.

He is intelligent and bears a good moral character, and his conduct was good throughout.

T. T. Jayaratnam
Principal.

# பிரதி அதிபரின் நற்சான்று

அதிபர் ரி.ரி.ஜெயரட்ணத்தின்காலத்தில் மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்த கே.கிருஷ்ணபிள்ளை அவர்கள் தமது மாணவன் உமாபதிக்கு வழங்கிய சான்றுப் பத்திரம் இது : -

KK/RM.

MAHAJANA COLLEGE

T. T. JAYARATNAM, B. A. (Lond.), M. R. S. T.
PRINCIPAL

TELLIPPALAI (CEYLON)

9th February 1955.

This is to certify that Mas.K. Umapathy was a student of this college for a period of eight years and passed his G.C.E. (Ordinary Level) Examination in 1954. He took a keen interest in athletics, football, and volley ball and other extra mural activities. He was also President of the Tamil Literary Association for a term.

He was a hardworking student and his character is good.

K. Krishnapillai
Vice Principal.

# Dialysis அனுபவம்

அமரர் கந்தையா உமாபதி அவர்கள் தமது கடைசிக் காலத்தில் சிறுநீரக பாதிப்புக் காரணமாக சிறுநீர்க் கலவைப் பிரிப்பு நடவடிக்கைக்கு உட்பட வேண்டியவரானார். நூறு தடவைகளுக்கு மேல் அந்த சிகிச்சையை எதிர் கொண்ட அவர், அச்சமயம் ஏற்பட்ட தமது அனுபவத்தை - பட்டறிவை - தமது தள்ளாத வயதிலும் அழகுற ஆங்கிலத்தில் அச்செழுத்தில் எழுதியும் வைத்தார். அதன் பிரதி வருமாறு:-

Patients experiance

When the dialysis, half way in progress, both legs become benumbed, Shivering with Crampness all over the body and the B.P. Shoots up lasting for nearly 1½ hours.. No relief or Medication provided, Making me Suffer during the Whole process.. Complications Concealed in the Dialysis record overleaf right from the inception

Umapathy

(K. UMAPATHY)

**அதன் மொழிபெயர்ப்பு:-**

சிறுநீரகக் கலவைப் பிரிப்பு மேற்கொள்ளும் சமயம் அரைவழியில் இரண்டு கால்களுமே உணர்வற்றவையாகும். முழு உடம்பிலும் நடுக்கத்துடன் சதைப்பிடிப்பு ஏற்படும். இரத்த அழுத்தம் எகிறி, சுமார் ஒன்றரை மணி நேரம் நீடிக்கும். இவற்றுக்கு நிவாரணியோ மருந்தோ தரப்படுவதில்லை. அதனால் அந்த முழு நடவடிக்கையுமே எனக்கு கஷ்டத்தைத் தருவதாக இருக்கும். சிறுநீரகக் கலவைப் பிரிப்புக்குள் பொதிந்துள்ள இச்சிக்கல்கள் ஆரம்பம் முதல் நீடிப்பவை.

## போற்றப்படவேண்டிய முதுமை

முதியவர்களின் அனுபவங்கள், சாதனைகள், இலட்சியங்கள், தோல்வி கள், வெற்றிகள், எதிர்பார்ப்புகள்... இப்படியே அவர்களது மன உணர்வு களைக் கூறிக் கொண்டே போகலாம். ஒரு நாட்டின் பொக்கிஷங்கள்தான் இந்த முதியவர்கள். Senior Cetizen என்ற சொற்பதத்தினால் அழகாக அழைக் கப்படுகிறார்கள். அவர்களுக்கு நல்ல, பல சலுகைகளும் வழங்கப்படுகின் றன. இவற்றையெல்லாம் கடந்து இன்று குறிப்பாக நமது நாட்டை எடுத்துக் கொண்டால் முதியவர்கள் அன்புக்காக ஏங்குபவர்களாகவும், தமது தேவை களை, விருப்பங்களை நிறைவேற்ற வேறு ஒருவரின் உதவியை எதிர்பார்த்து வாழ்பவர்களாகவும், சிலர் பொருளாதாரத்திலும் பின்தங்கி இருப்பதால் குடும் பத்தால் வேண்டாத பொருட்கள் போல் வெறுக்கப்படுபவர்களாகவும் காணப் படுவது ஏற்றுக் கொள்ளமுடியாத யதார்த்தமாகும். இம் முதியவர்கள் சமூக, மருத்துவ, பொது நிலையங்களிலும் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றார் கள் என்பது மாற்றுக் கருத்துக் கூற முடியாத உண்மை. அநாதரவாகக் கை விடப்பட்ட முதியவர்கள் தெருவோரத்தில் பிச்சை எடுக்கும் நிலையும், பொது இடங்களில் பொழுதைக் கழிக்கும் நிலையும், இரவுக் காலத்தைப் போக்கும் நிலையும் காணக்கூடியதாக உள்ளது. இவற்றை நாம் உற்று நோக்கும்போது முதியவர்கள் சாதனையாளர்கள், அனுபவசாலிகள் என்ற சொற்பதங்களுக் குப் பொருத்தமற்றவர்களாகவும் அநாதரவாகக் கைவிடப்பட்டவர்களாகவும் காணப்படுவது வேதனைக்குரியதாகின்றது.

பிறப்புண்டேல், இறப்பும் உண்டு. இறப்புக்கு முன் முதுமையும் உண்டு. இது இயற்கையின் நியதி. ஆனால் இதற்கும் விதிவிலக்குகள் உண்டு. எமது மூதாதையர் காலத்தில் 70 வருடங்கள் அல்லது அதற்கு முந்திய காலங்

களில் வயோதிபம் பின்போடப்பட்டு இறுதிவரை ஆரோக்கியமான வாழ்வை வாழ்ந்து 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என இருந்தார்கள். இன்று உலகமே உள்ளங்கையில் அடங்கிவிட்ட நிலையில் ஏது உடற்பயிற்சி? ஏது ஆழ்ந்த சிந்தனை? ஏது தேடல்? அவை இருந்த இடத்திலேயே எல்லாவற்றையும் அடையும் வசதி. இவையெல்லாம் ஆரோக்கியமானவையா? அல்லது ஆரோக்கியமற்றவையா? என்பதற்கு விடை காண மனிதன் ஓடுகின்றான். தொடர்ச்சியாகக் கட்டுப்பாடற்ற உணவுப் பழக்கவழக்கங்கள், எதற்கும் உடனடியாக மருந்துகளைப் பாவிக்கும் முறை, இரசாயன கிருமிநாசினிகள் பாவித்த மரக்கறிகள், பழவகைகள், இறைச்சி வகைகள் என்பன முக்கிய அங்கம் வகிக்கின்றன.

போற்றப்பட வேண்டிய முதுமையை புறக்கணிக்காது ஏற்றுக்கொண்டு வாழ்வது நமது கடமைகளில் ஒன்றெனக் கருதி வாழ்வோமாக!

**'அம்மா இல்ல' நிர்வாகி**
**Dr.உமாபதி ஸ்ரீசங்கர்.**

# நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் சத்திர சிகிச்சை

நீரிழிவு நோயானது மருத்துவத் துறையில் "மெல்லக் கொல்லும்" (Silent Killer) வியாதியாகக் கருதப்படுகின்றது. இந்தச் சவாலை எதிர்கொள்ள பல மருத்துவ தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், சத்திர சிகிச்சை யானது நீரிழிவின் பக்க விளைவுகளை (Complications) கட்டுப்படுத்தவே உதவியது. ஆனால் அண்மைக் கால கண்டுபிடிப்புகளும் ஆய்வுகளும் நீரிழி வுக்குரிய சத்திர சிகிச்சை முறை ஒன்றை அறிமுகப்படுத்தியது. இது எமது நாட்டில் பிரபல்யம் அடையாத போதிலும் மேலைத் தேய நாடுகளில் மிக முக் கிய நீரிழிவு வைத்திய முறையாகக் கையாளப்படுகின்றது.

நீரிழிவுக்கான சத்திர சிகிச்சையின் போது இரப்பையின் பெரும் பகுதி Laparoscopy (லப்பிரஸ்கோபி) மூலம் அகற்றப்படும். இதனால் கடுமையான உணவுக் கட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டு நோயாளியின் உடல் நிறை குறைவது டன் நீரிழிவை தூண்டக்கூடிய முக்கிய இரப்பை ஹோமோன்கள் சுரக்கும் பகுதியும் அகற்றப்படுவதால் நீரிழிவானது மிகவும் இலகுவாக கட்டுப்படுத்தப் படுகிறது. இச்சத்திர சிகிச்சை முறையானது பல வகைப்பட்ட போதிலும் கூடு தலாக Sleeve gastrectomy எனப்படும் முறையே நடைமுறையில் உள்ளது.

இந்தச் சத்திர சிகிச்சைக்குரிய நோயாளியை தெரிவு செய்வதில் நீரிழிவு நோயுடன் அவருடைய உடற்திணிவு சுட்டெண் (BMI) உம் முக்கிய பங்களிக் கின்றது. அதாவது BMI (Body Mass Index) 25 ற்கும் கூடுதலாகவுள்ள நீரிழிவு நோயாளி மட்டுமே இந்தச் சத்திர சிகிச்சை மூலம் கூடிய அனுகூலங் களைப் பெறுவார். மேலும் உயர் குருதியமுக்கம் (Hypertension) உம் கட்டு

பாட்டுக்குள் வருகின்றது. இதனால் இச்சத்திர சிகிச்சை முறை Metabolic Surgery எனவும் அழைக்கப்படும்.

எனவே நீரிழிவு, உயர்குருதியமுக்கம், மேலதிக உடற்பருமன் உள்ளவர்கள் இச்சத்திர சிகிச்சைக்கு உட்படுத்துவதன் மூலம் நாளாந்தம் உட்கொள்ள வேண்டிய மாத்திரைகளை நிறுத்த அல்லது குறைக்க முடியும். மேலும் Insulin ஊசி ஏற்றுபவர்கள் அதை தவிர்த்து மாத்திரை மூலம் கட்டுப்படுத்துகின்ற நல்ல நிலைக்கு வரலாம். இச்சத்திரசிகிச்சை மூலம் நீரிழிவினால் ஏற்படும் பாரதூரமான பக்கவிளைவான பக்கவாதம், மாரடைப்பு, உடல் அவயவ இழப்பு, சிறுநீரக செயலிழப்பு என்பன 90 சதவீதம் தடுக்கப்படுவதோடு நீரிழிவானது மிகவும் இலகுவாகக் கட்டுப்படுத்தப்படுவது விஞ்ஞான ஆய்வுகள் மூலம் நிரூபணமாகியுள்ளதை நீவீர் வலைத் தளங்களின் உதவியுடன் அறிந்து கொள்ளலாம்.

" HELP EVER; HURT NEVER" - BABA

**வைத்தியக் கலாநிதி புவனேந்திரநாதன் ஆதவன்**
***சத்திர சிகிச்சை நிபுணர்,***
***கொழும்பு தேசிய வைத்தியசாலை.***

# விடமுறிவுக்கு நம்நாட்டு மருத்துவம்

**நஞ்சு முறிவுக்கு மூலிகைகள் - Anti Dote - Herbś**

1) அவுரி – Indigofera Tinctoria
2) நஞ்சறுப்பான் கொடி - Tylophora Asthmatica
3) சிறியாள் நங்கை - Ploygala Grinersis
4) குப்பை மேனி - Acalypha Indica
5) அறுகம்புல் - Cynodon Dectylon
6) மூக்கிறட்டைக் கீரை - Boerhaavie Diffusa

**மட்டைத்தேள், தேனீ, குளவி போன்றன கொட்டினால் கடிவாயில் போடுவது**

1) சுண்ணாம்பு பூசுதல் அல்லது
2) நாயுருவிக்கொழுந்து அரைத்துப் பூசுதல் அல்லது
3) வெங்காயம் அரைத்துப் பூசுதல் அல்லது
4) உருளைக்கிழங்கு அரைத்துப் பூசுதல் அல்லது
5) மண்ணெண்ணெய் பூசுதல்

**புலிமுகச் சிலந்தி கடித்தால் கடிவாயில் போடுவது**

1) உப்பு, புளி, மிளகு, ஏலம் இவற்றை ஒன்றாகச் சேர்த்து அரைத்து பூசிவிடுக. அல்லது
2) பலாக்காய் பால் அல்லது
3) பழப்புளி, சுண்ணாம்பு ஒன்றுசேர்த்துப் பூசுக.

**உட்கொள்வது**

1) தென்னை மட்டைச் சாறு அல்லது
2) ஈச்சமிலைச் சாறு அல்லது
3) துத்தி இலைச் சாறு

**தேள் கொட்டினால் கடிவாயில் போடுவது**

1) வெண்காயத்தை அரைத்துப் போடுதல் அல்லது
2) பழப்புளி, சுண்ணாம்புடன் சேர்த்துப் போடுதல் அல்லது
3) தும்பை இலை, துளசி இலை சேர்த்து அரைத்துப் போடுதல்

**உட்கொள்வது**

தேங்காய்ப்பாலில் அவுரிவேரை அரைத்து உண்ணுதல்.

# CHRONIC KIDNEY DISEASE (CKD)

The kidneys are bean-shaped organs that serve several essential regulatory roles in vertebrates. They remove excess organic molecules from the blood, and it is by this action that their best-known function is performed: the removal of waste products of metabolism.

**6 Things Healthy Kidneys Do:**

- Regulate the body's fluid levels
- Filter wastes and toxins from the blood
- Release a hormone that regulates blood pressure
- Activate Vitamin D to maintain healthy bones
- Release the hormone that directs production of red blood cells
- Keep blood minerals in balance (sodium, phosphorus, potassium)

What is **Chronic Kidney Disease (CKD)?**

- CKD is evidence of renal damage (based on abnormal UA [proteinuria, hematuria] or structural abnormalities found with US) or GFR ( Glom erular filtration rate) $< 60$ mL/min for 3 or more months

**Table 1. Stages of chronic kidney disease.**

<table>
<tr><th>Stage</th><th>Description</th><th>eGFR (mL/min)</th><th>Potential complications of reduced GFR (in alphabetical order)</th></tr>
<tr><td>1</td><td>Kidney damage with normal or ↑GFR</td><td>≥90</td><td rowspan="5">• Anemia, including functional iron deficiency<br>• Blood pressure increases<br>• Calcium absorption decreases<br>• Dyslipidemia /heart failure/volume overload<br>• Hyperkalemia<br>• Hyperparathyroidism<br>• Hyperphosphatemia<br>• Left ventricular hypertrophy<br>• Metabolic acidosis<br>• Malnutrition potential (late)</td></tr>
<tr><td>2</td><td>Kidney damage with mild ↓GFR</td><td>60–89</td></tr>
<tr><td>3</td><td>Moderate ↓GFR</td><td>30–59</td></tr>
<tr><td>4</td><td>Severe ↓GFR</td><td>15–29</td></tr>
<tr><td>5</td><td>Kidney failure</td><td><15 or dialysis</td></tr>
</table>

Source: Adapted from Identification, Evaluation and Management of Chronic Kidney Disease (www.health.gov.bc.ca/gpac/pdf/ckd.pdf)

**8 Problems CKD Can Cause:**

- Cardiovascular disease
- Heart attack and stroke
- High blood pressure
- Death
- Weak bones
- Nerve damage (neuropathy)
- Kidney failure (end-stage renal disease, or ESRD)
- Anemia or low red blood cell count

**4 Main Risk Factors:**

- Diabetes (self or family)
- High blood pressure (self or family)
- Cardiovascular disease (self or family)
- Family history of kidney disease or diabetes or high blood pressure

**10 Additional Risk Factors:**

- African-American heritage
- Native American heritage
- Hispanic, Asian, Pacific Islander heritage
- Age 60 or older
- Obesity
- Low birth weight
- Prolonged use of NSAIDs, a type of painkillers, such as ibuprofen and naproxen
- Lupus, other autoimmune disorders
- Chronic urinary tract infections
- Kidney stones

**8 Possible Trouble Signs:**

Most people with early CKD have no symptoms, which is why early testing is critical. By the time symptoms appear, CKD may be advanced, and symptoms can be misleading. Pay attention to these:

- Fatigue, weakness
- Difficult, painful urination
- Foamy urine
- Pink, dark urine (blood in urine)
- Increased need to urinate (especially at night)
- Puffy eyes
- Swollen face, hands, abdomen, ankles, feet
- Increased thirst

**If you or a loved one belong to a high-risk group, ask your primary-care physician about these tests-and be especially insistent about the last one. Your doctor may want to perform other tests as well.**

**4 Simple, Life-Saving Tests:**

- What: • **Blood Pressure**
- Why: • High blood pressure can damage small blood ves sels (glomeruli) in the kidneys. It is the second-lead ing cause of kidney failure after diabetes.
- Good Score: • Below 140/90 is good for most people. Below 130/ 80 is better if you have chronic kidney disease. Be low 120/80 is best.

- What: • **Protein in Urine**
- Why: • Traces of a type of protein, albumin in urine (albu minuria) is an early sign of CKD. Persistent amounts of albumin and other proteins in the urine (prteinuria) indicate kidney damage.
- Good Score: • Less than 30 mg of albumin per gram of urinary creatinine (a normal waste product)

- What: • **Creatinine in Blood (Serum Creatinine)**
- Why: • Healthy kidneys filter creatinine (a waste product from muscle activity) out of the blood. When kidney function is reduced, creatinine levels rise.

- Good Score: • 0.6 to 1.2 mg per deciliter of blood, depending on other variables

- What: • **Glomerular Filtration Rate (GFR)**
- Why: • This is the most sensitive and accurate gauge of kidney function. Doctors measure blood creatinine levels and perform a calculation based on age, race, and gender.
- Good Score: • Over 90 is good. 60-89 should be monitored. Less than 60 for 3 months indicates CKD.

**6 Things People with CKD Should Do:**


- Lower high blood pressure
- Keep blood-sugar levels under control if diabetic
- Reduce salt intake
- Avoid NSAIDs, a type of painkillers
- Moderate protein consumption
- Get an annual flu shot

**9 Things Everyone Should Do:**

- Exercise regularly
- Control weight
- Follow a balanced diet
- Quit smoking
- Drink only in moderation
- Stay hydrated
- Monitor cholesterol levels
- Get an annual physical
- Know your family medical history

**Edited By:**
**Mathangan Srishankar &**
**Verlmaran Srishankar**
**Grandsons**
Final Year Medical Students,
University Of Chittagong,
Bangladesh.


## வம்சாவழி


●வேலுப்பிள்ளை
●இராசா காசியர்
(நாடகத்தில் இராசாவாக நடித்ததால் அப்பெயர்)
(அவருக்கு 3 ஆண், 3 பெண் மகவுகள்)
●நரசிங்கம்
(அறுபத்து மூவர் பூசை 3 முறை செய்தவர்)
( அவருக்கு 3 பெண் , 2 ஆண் மகவுகள்)
●பொன்னம்பலம்
(அவருக்கு 3ஆண், 3 பெண் மகவுகள்)
●கந்தையா
(விஷகடி வைத்தியர்)
●தெய்வானைப்பிள்ளை
●சின்னக்குட்டி + சீதை
( அவர்களுக்கு 3 பெண், 2 ஆண் மகவுகள்)
●சின்னத்துரை + ●காமாட்சிப்பிள்ளை
(முகாந்திரம் நாராயணின் சகோதரர்)
●செல்லாச்சிப்பிள்ளை
●கந்தையா
(அரச சேவையாளர்)
கந்தசாமி + நிர்மலாதேவி
●இராசபூமணி + ●எஸ்.சிவநம்பிக்கை (நீதிபதி)
நாகேஸ்வரி + ●ஆ.கந்தசாமி
சுந்தரமூர்த்தி + ●இரத்தினதேவி
●இராஜேஸ்வரி
உமாபதி
●பாலசுப்பிரமணியம்
ஸ்ரீசங்கர் + ஜெயகௌரி
மாதங்கன்
வேள்மாறன்
● அமரரைக் குறிக்கும்

# என்றென்றும் எங்கள்
# நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்....

எமது குடும்பத் தலைவர்
அமரர் கந்தையா உமாபதி அவர்கள்
இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆறுதல் கூறிய
அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்,
எமது இல்லத்துக்கு வருகை தந்தும்,
இறுதிக் கிரியை, இறுதி ஊர்வலம்
என்பவற்றில் கலந்துகொண்டும் தொலைபேசி,
தபால் மூலமும் வேறு வகையிலும் தமது அனுதாபத்தை
தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையம்
வைத்து அஞ்சலி செலுத்திய அனைத்து
அன்பு நெஞ்சங்களுக்கும் எமது
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
நன்றி.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**



# சிவயோக சுவாமிகள் உரைத்த
# நான்கு மகா வாக்கியங்கள்



'எப்பவோ முடிந்த காரியம்'

'நாம் அறியோம்'

'ஒரு பொல்லாப்பும் இல்லை'

'முழுதும் உண்மை'

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும்"

பகவான்
ஸ்ரீ கிருஷ்ணர்



சிவராம் பதிப்பகம்
20(32) கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம், 021 2219...